Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 24, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 41

# 6 புதிய உத்தரவுகளில் கையெழுத்திட்டு 293வது மதுரை ஆதினம் பீடரோகன ஏற்கும் நிகழ்வு



மதுரை 24 ஆகஸ்ட் 2021: 293 வது மதுரை ஆதினமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் பீடத்தில் அமரும் பீடரோகன நிகழ்வு நடைபெற்றது.

தருமைபுர ஆதினத்தின் 27வது குரு மகாசன்னிதானம் கைலை மாசிலாமணி தேசிக ஞானதேசிக பராமாச்சாரிய சுவாமிகள் முன்பாக பீடரோகன நிகழ்வு நடைபெற்றது. 6 புதிய உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

விடுப்பட்டு போன மீனாட்சியம்மன் கோவில் உஷாகால கட்டளைகள் நிறைவேற்றப்படும், மதுரை ஆதின திருமடத்தில் நித்ய பூஜை, மாகேஸ்வர பூஜை அன்னதானம் வழங்குவது, மதுரை ஆதினத்திற்கு சொந்தமான 4கோவில்களிலும் நித்யபடி பூஜைகள், தினசரி நடத்தப்படும், குடமுழக்கு உள்ளிட்ட திருப்பணிகளை விரைவுப்படுத்த உத்தரவு, உள்ளிட்ட 6 உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார்.

காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதினம், பேரூர் ஆதினம், சிரவை ஆதினம் உள்ளிட்ட பல்வேறு மடங்களின் ஆதினங்கள் மற்றும் ஆன்மீக பெரியோர்கள் பங்கேற்பு.

# மத்திய அரசின் புதிய ஹால்மார்க் விதிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆண்டிபட்டியில் ஆர்ப்பாட்டம்

ஆண்டிபட்டி, ஆக. 24 2021: தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நகைக்கடை உரிமையாளர்கள் மத்திய அரசின் புதிய கால் மார்க் முத்திரை பதிக்கும் விதிக்கு எதிர்ப்பு தெரிவித்து கடை அடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சமீபத்தில் மத்திய அரசு அறிவிப்பின்படி ஒவ்வொரு தங்க நகைக்கும் ஆறு இலக்கம் கொண்ட ஹால்மார்க் அடையாள எண் கட்டாயம் என்று அறிவித்தது. ஆனால் தர முத்திரை வழங்கும் மையங்களில் போதுமான வசதிகள் இல்லாததாலும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் முடங்கி உள்ளது என்று கூறியும் ,ஏற்கனவே கொரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தங்க நகை வணிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த விதியால் மேலும் பாதிப்பை தங்க நகை வியாபாரிகள் அடைவார்கள் என்று கூறி, தமிழகம் முழுவதும் நகை கடை உரிமையாளர்கள் இன்று 11:30 மணி வரை நகை கடைகளை அடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



அதன் ஒரு கட்டமாக ஆண்டிபட்டியில் தங்கநகை உரிமையாளர்கள் சங்க தலைவர் தண்டாயுதபாணி தலைமையில், செயலாளர் ரமேஷ், பொருளாளர் நாகப்பன், துணைச் செயலாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் கடைகளை அடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் ஏராளமான தங்க நகை கடை உரிமையாளர்கள் பங்குபெற்றனர்.

# விக்கிரவாண்டியில் புதிய மின்மாற்றி எம்.எல்.ஏ. புகழேந்தி துவக்கி வைத்தார்

விக்கிரவாண்டி, ஆக. 24 2021: விக்கிரவாண்டி அடுத்த ராதாபுரம் அரசு மருத்துவ மனைக்கு புதிய மின்மாற்றியை எம்.எல்.ஏ., புகழேந்தி துவக்கி வைத்தார்.

விக்கிரவாண்டி அடுத்த ராதாபுரத்தில் வட்டார அரசு மருத்துவ மனை பகுதியில் குறைந்த தாழ்வழுத்த மின்சாரத்தை சரி செய்ய புதிய மின்மாற்றி அமைக்க வேண்டும் என அரசு டாக்டர்கள், பொதுமக்கள் எம்.எல்.ஏ., புகழேந்தியிடம் கோரிக்கை மனு அளித்தனர். இதையடுத்து விழுப்புரம் மின்வாரிய செயற்பொறியாளர் சைமன் சார்லஸ் துரித நடவடிக்கை எடுத்து உடனடியாக மருத்துவ மனைக்கு 100/22கேவி மின்மாற்றி அமைத்தார்.

மருத்துவமனை அருகில் நடந்த நிகழ்ச்சிக்கு எம்.எல்.ஏ., புகழேந்தி தலைமை தாங்கி புதிய மின்மாற்றியை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தார். உதவி செயற்பொறியாளர் பிரசன்னா, உதவி மின்பொறியாளர் பிரபு, பி.டி.ஓ., நாராயணன், வட்டார மருத்துவ அலுவலர் வினோத், டாக்டர் பாலாஜி அய்யனார், சுகாதார மேற்பார்வையாளர் கிருஷ்ணன், தலைமை செவிலியர் புனிதா, ஒன்றிய பொறியாளர் இளையராஜா, ஊராட்சி செயலாளர் சண்முகம், தி.மு.க., மாவட்ட துணை அமைப்பாளர்கள் எத்திராசன், முரளி, ராஜசேகர், கிளை செயலாளர்கள் சரவணன்,அருண், அய்யனார், செல்வராஜ், சபரி, செந்தமிழ்செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் ராஜமாணிக்கம், தன்ராஜ், வெங்கடேசன், வர்த்தகர் சங்கம் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி அடுத்த ராதாபுரம் அரசு மருத்துவ மனையில் எம்.எல்.ஏ., புகழேந்தி புதிய மின்மாற்றியை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

# செஞ்சியில் உழவர் சந்தை அமைச்சர் செஞ்சிமஸ்தான் திறந்து வைத்தார்

செஞ்சி,ஆக 24 2021: விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் வேளாண் விற்பணை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் ரூ 14. லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட உழவர் சந்தையினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் பொது மக்களின் பயன் பாட்டிற்காக வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

செஞ்சியில் 24 கடைகளுடன் 2009-ம் ஆண்டு உழவர் சந்தை திறந்து வைக்கப்பட்டது. பின்னர் உழவர் சந்தை பராமரிப்பு இல்லாமல் போனதால் உழவர் சந்தை மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் போனது. இந்நிலையில் தற்போது ரூ 14 லட்சம் மதிப்பில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு உழவர் சந்தை புதுப்பிக்கப்பட்டது. உழவர் சந்தையினை திறந்து வைத்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் விவசாயிகள் விற்பணை செய்ய ஏதுவாக அடையாள அட்டையினை வழங்கியும், முதல் விற்பணையையும் தொடங்கி வைத்தார். அப்போது அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஒவ்வொரு கடையிலும் உள்ள காய்கறிகளை கேட்டறிந்து கத்திரிகாய், வெண்டைகாய், புடலங்காய், முருங்கை, புடலங்காய், வாழைக்காய், கீரை வகைகள் உள்ளிட்ட காய்கறிகளை விவசாயிகளிடம் தகுந்த விலை கொடுத்து வாங்கிச்சென்றார். மேலும் இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் மானியத்துடன் 30 நபர்களுக்கு ரூ 1,25, 714. மதிப்பீட்டில் மழைத்துவான் கருவி, தெளிப்பு நீர்பாசன கருவி, உளுந்து விதை மற்றும் உயிர் உரம், கோணாவீடர் மற்றும் பேக்ட் ஆர்கானிக் உரம், திரவ நானோ யூரியா உள்ளிட்ட பொருட்களையும், தோட்டக்கலைத்துறை சார்பில் மானியத்துடன் 10 நபர்களுக்கு ரூ 6,64,500. மதிப்பீட்டில் நிழல் வலை குடில் பணி ஆணை, சிப்பம் கட்டும் அறை மற்றும் சின்ன வெங்காயம் விதை உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் த.மோகன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ரமணன், வேளாண் துணை இயக்குனர் கண்ணகி மற்றும் முன்னாள் எம்எல்ஏ பா.செந்தமிழ்செல்வன், செஞ்சி ஒன்றிய திமுக செயலர் ஆர். விஜயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# "துரைமுருகன் சட்டப்பேரவையின் நூற்றாண்டு நாயகன்" அவர் எனக்கு வழிகாட்டியாக உள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆகஸ்ட் 24 2021: தமிழக சட்டப்பேரவை மூன்று நாள் விடுமுறைக்குப்பின் நேற்று கூடியது. இன்றில் இருந்து அடுத்த மாதம் 17-ந்தேதி வரை துறை ரீதியான மானிய கோரிக்கை விவாதம் நடைபெறுகிறது.

நேற்று நீர்வளத்துறை மானிய கோரிக்கை நடைபெறுகிறது. நீர்வளத்துறை அமைச்சராக துரைமுருகன் உள்ளார். இவர் நீண்டகாலமாக சட்டசபையில் உள்ளார். இவரை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது மு.க. ஸ்டாலின், 'துரைமுருகன் சட்டப்பேரவையின் நூற்றாண்டு நாயகன். அவர் எனக்கு வழிகாட்டியாக உள்ளார். கலைஞர் கருணாநிதிக்கும், எனக்கும் வழித்துணையாக இருந்தவர். எந்தத்துறை கொடுத்தாலும், அதில் முத்திரை பதிப்பார்' என பாராட்டி பேசினார்.



# வடபழனி, சிம்ஸ் மருத்துவமனையில் அரிய வகை அறுவை சிகிச்சை!

## டைட்டானிய உலோகம் மற்றும் பாலி-எத்திலின் கொண்டு, 3டி பிரிண்டிங் முறையில் உருவாக்கப்பட்ட தாடை எலும்புகளை நோயாளிகளுக்குப் பொருத்தி மருத்துவர்கள் சாதனை!

சென்னை, ஆகஸ்ட் 24 2021: சென்னையில் உள்ள பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகளில் பிரபலமாக உள்ள, வடபழனி, சிம்ஸ் மருத்துவமனையின் மருத்துவர்கள், 3ஞி பிரிண்டிங் எனக் குறிப்பிடப்படும் அதிநவீன தொழில்நுட்பத்தின்படி தயாரிக்கப்பட்ட மனித தாடையின் முழுமையான எலும்புகளை நோயாளிகளுக்கு வெற்றிகரமாகப் பொருத்தியுள்ளனர். இவ்வகையில் செய்யப்பட்ட அரிதான அறுவை சிகிச்சை இது என்பது குறிப்பிடத்தக்கது.



இது குறித்து விளக்கமளிக்க ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் எஸ்.ஆர்.எம். குழுமத்தின் தலைவர் திரு. ரவி பச்சமுத்து, சிம்ஸ் மருத்துவமனையின் துணைத் தலைவர் மருத்துவர் ராஜூ சிவசாமி, அம்மருத்துவமனையின் மண்டையோடு மற்றும் முக அழகியல் சீரமைப்பு சிறப்பு சிகிச்சைப் பிரிவின் இயக்குனர், மருத்துவர் கே ஸ்ரீதர் ஆகியோர் பங்கேற்றனர். அப்போது மரு. கே ஸ்ரீதர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“இடுப்பு எலும்பு மற்றும் மூட்டு எலும்புகளின் மாற்று அறுவை சிகிச்சை தற்போது பரவலாக நடைபெற்றாலும், முகத்தின் ஒரு பகுதியான தாடை எலும்புகளை நவீன தொழில்நுட்பத்தின்படி மிகத் துல்லியமாக உருவாக்கி, அதைப் பொருத்துவது அரிதிலும் அரிதாக நடக்கும் நிகழ்வாகும்.

நாங்கள் தற்போது மூன்று நோயாளிகளுக்கு இந்த முழு தாடை எலும்பு மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டுள்ளோம். இதில் இருவருக்கு அறுவை சிகிச்சைகள் முடிந்து விட்டன. மூன்றாமவருக்கு விரைவில் அறுவை சிகிச்சை நடைபெறவுள்ளது. முதலாமவருக்கு வேறு மருத்துவமனையில் முன்பு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், சிகிச்சைக்குப் பிறகு அவரால் வாயைத் திறக்க இயலாமல் போனது. அதனால், பாதிப்புக்கு உள்ளான அவரது தாடையின் பகுதியை தற்போது டைட்டானிய உலோகத்தைக் கொண்டு உருவாக்கிப் பொருத்தி சீரமைத்துள்ளோம். கிட்டத்தட்ட இதே மாதிரி பிரச்சனைதான் இன்னொரு நோயாளிக்கும். அவரது தாடை எலும்பும், மண்டை ஓட்டின் பகுதியும் இணையும் இடத்தில் உள்ள மூட்டு, இயங்க முடியாத நிலையில் இருந்தது. அதனால், இவரும் வாய் திறக்க இயலாத நிலையில் இருந்தவர்தான். இதுதவிர, தூக்கத்தில் குறட்டை விடும் பிரச்சனையும், போதுமான ஆக்ஸிஜனை உட்கொள்ள இயலாத பிரச்சனையும் இவருக்கு இருந்தது. கூடுதலாக, இவரது தாடை எலும்பும் தேவையான அளவைவிட சிறிதாக இருந்தது. இவருக்கு முதலில், அளவில் குறைந்திருந்த அவரது தாடை எலும்பு நீளமாக்கப்பட்டு, தேவையான அளவிற்கு, பொருத்தமான வடிவில் செய்து பொருத்தப்பட்டது. அதன்பின்னர் முழு தாடை மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, அவரது மற்ற பிரச்சனைகளையும் சேர்த்து முழுமையான தீர்வு கொண்டுவரப்பட்டது. மூன்றாவது நபருக்கு எலும்பில் ஒரு கட்டி இருந்தது. அதனால், 20 ஆண்டுகளுக்கு முன்பே அவரது தாடை எலும்பின் ஒரு பகுதி, அதை மண்டை ஓட்டுடன் இணைக்கும் பகுதி, அதையொட்டியுள்ள முகப்பகுதி எலும்புகள் என எல்லாவற்றையும் நீக்கி இருந்தார்கள். இவருக்கு முற்றிலும் புதிய, அவரது முக வடிவுக்கு பொருந்துவதாக சீரமைக்கப்பட்ட தாடை எலும்பு தேவைப்பட்டது. அதனால், இந்த பாகங்கள் அனைத்தையும் டைட்டானியம் மற்றும் பாலி-எத்திலின் கொண்டு 3ஞி பிரிண்டிங் தொழில்நுட்பத்தின் உதவியுடன் திட்டமிட்டு உருவாக்கினோம். அதுதவிர, அவரது பாதி தாடைப் பகுதியில் பற்கள் தேவைப்பட்டதால், அவரது கால் எலும்பில் இருந்து எடுக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டு, நுண்ணிய அறுவை சிகிச்சை மூலம் பற்கள் உருவாக்கப்பட்டு, அவை செயற்கை தாடைகளில் கச்சிதமாக, சரியான இடத்தில் பொருந்தும் வகையில் உருவாக்கப்பட்டன. இவை அனைத்தும் ஒரே கட்டமாக செய்யப்பட்டதால், விரைவில் இந்த நபரும் பற்களுடன் கூடிய தாடை எலும்பைப் பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இரண்டு நோயாளிகளால் முழுமையாக வாயைத் திறக்க முடிகிறது. பல ஆண்டுகள் கழித்து திட உணவுப் பொருட்களை அவர்கள் உட்கொள்கிறார்கள். மூன்றாவது நபரும் விரைவில் அவருக்காக உருவாக்கப்பட்ட பற்கள் பொருத்தப்பட்ட தாடையைப் பெறுவார்.

கிருமித் தொற்று, கீல்வாதம் எனப்படும் மூட்டு பிரச்சனை, எதிர்பாராத அதிர்ச்சி போன்றவற்றால் வாய் திறக்க இயலாத நிலையை அடையும் நபர்கள், அதனால் சரியான உணவு உட்கொள்ள இயலாத பிரச்சனை ஏற்படுகிறது. பல நோயாளிகளில், இவர்களால், 2 அல்லது 3 மி.மீ. இடைவெளிக்குத்தான் வாயைத் திறக்க இயலும். இதுபோன்ற பிரச்சனை உள்ள நோயாளிகள் திட உணவுப் பொருட்களை உட்கொள்ள இயலாது. அதன்பின், எந்நேரமும், மென்மையான, நீர்த்த அல்லது அரைத்த திட உணவுப் பொருட்களையே உட்கொள்ள இயலும். அந்தவகையில் ஒரு நிரந்தரப் பிரச்சனையாக இது மாறிவிடுகிறது” எனத் தெரிவித்தார்.

வழக்கமாக, இதுபோன்ற வாயைத் திறக்க இயலாத நிலையில் உள்ள நோயாளிகளுக்கு இறுகியுள்ள அவர்களது தாடை எலும்பு இணைப்பில் இடைவெளியை உருவாக்கி, மீண்டும் அது இறுகிவிடாதபடி செய்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால், இந்த முயற்சி வெற்றிகரமாக நீண்ட நாட்களுக்கு நீடிக்காததும், மீண்டும் பழைய நிலைக்கு நோயாளி தள்ளப்படுவதும் இயல்பு. அதுவே நடைமுறை யதார்த்தம். மறுபுறம், கேன்சர் போன்ற அதி தீவிர பாதிப்புகள் ஏற்படும்போது அருகில் உள்ள எலும்பையும் சேர்த்தே நீக்குவதால், அங்கு பெரிய இடைவெளி உருவாகும். அதுபோன்ற நேரங்களில், கால் பகுதியில் இருந்து எலும்புகள் எடுக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு, மறு சீரமைப்பு வேலைகள் நுண்ணிய அறுவை சிகிச்சை மூலம் செய்யப்படும். எனினும் தாடை எலும்பு இணைப்பு பகுதி சரியாக இருந்தால்தான் இது சாத்தியம். ஒருவேளை இணைப்புப் பகுதியே நீக்கப்பட்டு இருந்தால், தற்போது மேற்கொண்டுள்ளது போல, முழு தாடைப் பகுதியை உருவாக்கிப் பொருத்துவது ஒன்றுதான் மருத்துவர்களுக்கு உள்ள ஒரே வழியும், தீர்வும்.

இது குறித்து சிம்ஸ் மருத்துவமனையின் துணைத் தலைவர் மரு ராஜூ சிவசாமி கூறுகையில், "நோயாளிகளுக்கு பூரண உடல் நலத்தையும் அவர்கள் முழு ஆரோக்கியத்துடன் சுயமாக இயங்கச் செய்வதையுமே நோக்கமாகக் கொண்டு எங்களது மருத்துவச் சேவைகள் திட்டமிடப்படுகின்றன. இதற்கென உலகம் முழுவதிலுமுள்ள அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு புதிய தீர்வுகளை நாங்கள் உருவாக்கி வருகிறோம். அந்த வகையில் தாடை எலும்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து புதுமைகளை நிகழ்த்தி வருவதற்காக, மரு ஸ்ரீதருக்கும் அவரது குழுவினருக்கும் எங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

இது குறித்து எஸ்.ஆர்.எம். குழுமத்தின் தலைவர் திரு. ரவி பச்சமுத்து கூறுகையில், "அரிதான சில விஷயங்களை நிகழ்த்திக் காட்டுகிற தருணம் எப்போதும் பெருமைக்குரியதுதான். அந்த வகையில் நோயாளிகளுக்கு மறுவாழ்வு அளித்து மரு ஸ்ரீதர் மற்றும் அவரது குழுவினர் நிகழ்த்தியுள்ள இந்த அறுவை சிகிச்சைகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன். எங்களது மருத்துவமனையின் அழகியல் மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையானது 'வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவோம்' என்ற வாசகத்திற்கேற்ப செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நிகழ்வுகளின் மூலம் என்னால் உறுதியாகச் சொல்லமுடியும்" என்றார்.





**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் மேல்மங்கலம் சுற்று வட்டார சௌராஷ்டிரா பொதுமக்கள் ஆவணி அவிட்டதை முன்னிட்டு முன்னோர்கள் நினைவு நாளை முன்னிட்டு இறைவனிடம் படையல் வைத்து வாழைப்பழம் தேங்காய், பூ, சந்தனம், குங்குமம் வைத்து வழிபட்டு பழைய பூணூலை எடுத்துவிட்டு புதிய பூணூல் அணிந்தனர். இந்நிகழ்வில் பெரியகுளம் சௌராஷ்டிரா சத்திரத்தில் சபை தலைவர் ராஜன் தலைமையில் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**



**தேனி: தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே தாமரைக்குளத்தில் சர்வதேச பாரம்பரிய கலைமற்றும் விளையாட்டு தினத்தை ஒட்டி பிட்-இந்தியாசார்பாக மாவட்ட அளவிலான சிலம்பு போட்டிகள் பெரியகுளம் மேல்மங்கலத்தில் உள்ள ஸ்ரீ முத்தையா சிலம்பு பயிற்சி பள்ளியில் நடை பெற்றது. இப்போட்டிக்கு லோக கலா ஸ்ரீ சுந்தரவடிவேலன் மற்றும் சிலம்பக்கலை வளர்மணி திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டு ஆசான் முத்தையா முருகன், அக்கினி வீரன் சிலம்பு பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்ற 300 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசை பெற்றனர். இந்நிகழ்வில் அணைத்து மாணவ மாணவிகளுக்கும் ஷீல்டு வழங்கப்பட்டது .இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை முத்தையா முருகன் அவர்கள் தலைமையேற்று சிறப்பாக செய்திருந்தார். பயிற்சியாளர்கள் பரத்குமார், சுதர்சன், மாதேஷ், முத்து விஜய் வேல், யோகேஷ் கலந்து கொண்டனர் .அனைவர்க்கும் முகக்கவசம், தனி மனித இடைவெளி கிருமிநாசினி பயன்படுத்தப்பட்டது.**



**மதுரை: மதுரை முனிச்சாலையில் நடைபெற்ற மதுரை சாக்கு வியாபாரிகள் சங்க புதிய கட்டிட திறப்பு விழா நிகழ்ச்சியில் சங்க தலைவர் ஷிவபாலன் தலைமையில் தமிழ்நாடு தொழிற் வர்த்தக சங்க தலைவர் ஜெகதீசன் குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார். இதில் துணைத்தலைவர் சுயம்புலிங்கம், செயலாளர் கதிரேசன் உட்பட சாக்கு வியாபாரிகள் பலர் கலந்துகொண்டனர்.**

## பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், கொத்தப்பட்டி, வீரநாகம்மாள் கோவில் தெரு, என்ற முகவரியில் குடியிருந்து வரும் லேட். மணிகண்டன் அவர்களின் மனைவி M.கவிதா அவர்கள் அளித்திட்ட முறையான தகவலின் பெயரில் பொது அறிவிப்பு என்னவென்றால், எமதுக்கட்சிக்காரர் கடந்த 05.08.2021-ம் தேதியன்று கொத்தப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே உள்ள ஜெராக்ஸ் கடையில் அவர்களது குடும்ப சொத்து சம்பந்தமான ஆவணங்களை நகல் எடுக்க சென்றபோது அதில் ஆண்டிப்பட்டி சார்பதிவு அலுவலகத்தில் பதிந்திட்ட 1418/1984 என்ற பதிவு எண் கொண்ட எமது கட்சிக்காரரின் மாமனார் பாண்டியன் அவர்களின் பெயரில் உள்ள அசல் பாகப்பிரிவினை பத்திரம் தொலைந்துபோய்விட்டது. ஷ தொலைந்து போன அசல் பாகப்பிரிவினை பத்திரத்தை எமது கட்சிக்காரரர் பல இடங்களில் தேடியும் விசாரித்தும் பார்த்ததில் இதுநாள்வரை தொலைந்து போன அசல் பாகப்பிரிவினை பத்திரத்தை பற்றி எந்த ஒரு தகவலும் கிடைக்கவில்லை. ஷ எமது கட்சிக்காரரின் தொலைந்துபோன பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரிக்கோ, அல்லது எங்களது அலுவலக முகவரிக்கோ தெரிவித்திட வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆண்டிபட்டி 21.08.2021

**K.முருகன் B.Com, B.L.**
அட்வகேட் & நோட்டரி
பஸ் நிலையம் எதிர்புறம்
ஆண்டிபட்டி
Cell. No. 9790101571

# காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் சார்பாக உள்ளாட்சி தேர்தல் குறித்து மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் தலைமையில் அதிமுக மகளிர் அணிச் செயலாளர் பா.வளர்மதி ஆலோசனை வழங்கினார்



*செங்கல்பட்டு, ஆகஸ்ட் 24 2021:* செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் காட்டாங்ளொத்தூர் வடக்கு ஒன்றிய அதிமுக சார்பில் கொளப்பாக்கம் பகுதியில் உள்ளாட்சி தேர்தல் குறித்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய அதிமுக செயலாளர் எம்.கஜா என்கின்ற கஜேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சிட்லபாக்கம் ச. இராசேந்திரன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் கழக மகளிர் அணி செயலாளரும்,முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி ஆலோசனை வழங்கி பேசியதாவது:: அதிமுகவினர் மீது பொய் வழக்குகளை போட்டு அதிமுகவை வீழ்த்த நினைத்தால் அது நிச்சயம் நடக்கவே நடக்காது ஏனென்றால் எத்தனையோ சோதனைகளை ஏற்படுத்த முயன்ற கருணாநிதி கடைசியில் புரட்சித்தலைவி இதய தெய்வம் அம்மாவிடம் தோற்று தான் போனார். இந்த இயக்கத்தை அழிக்க வேண்டுமென்று எவரேனும் நினைத்தால் அவர்கள் தோல்வியை தான் சந்திப்பார்கள் ஏனென்றால் மக்களுக்கு சேவையை ஆற்றுவதில் ஈடு இணையற்ற இயக்கம் நமது கழகம். வரலாற்று வெற்றிகளை குவித்த நமது இயக்கம் தற்போது சிறியதொரு சறுக்கலை தான் சந்தித்துள்ளது . பொய்யான வாக்குறுதிகளால் இது ஏற்பட்டது என அனைவருக்கும் தெரியும். ஆகவே வரும் உள்ளாட்சி தேர்தலில் ஒன்றிணைந்து செயல்படுவோம் அனைத்து தொகுதிகளும் மாபெரும் வெற்றி பெற்று செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக்குவோம். இவ்வாறு அதிமுக மகளிர் அணி செயலாளர் பா.வளர்மதி பேசினார். இக்கூட்டத்தில் பரங்கிமலை ஒன்றிய அதிமுக செயலாளர் என்.சி.கிருஷ்ணன்,முன்னாள் எம்எல்ஏ ப.தன்சிங், எஸ்.கணிதாசம்பத், ஒன்றிய கழக செயலாளர் மேலமையூர் இ.சம்பத்குமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மறைமலைநகர் எம்.ஜி. கே.கோபிகண்ணன் , அம்மா பேரவை நகர செயலாளர் மறைமலைநகர் அர்.தசரதன், வேங்கடமங்கலம் ரவி, ரகுராமன், காட்டூர் கன்னியப்பன், ரங்கன், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட இணைச்செயலாளர் எல். பார்த்தசாரதி,எம்ஜிஆர் இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் காட்டாங்குளத்தூர் கனி என்கின்ற கணேஷ், கழக இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட இணைச்செயலாளர் வி.லலித் என்கின்ற லட்சுமிபதி, கழக இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை நகர செயலாளர் கீழ்கரணை அர்.வினோத் குமார், புரட்சித்தலைவி அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜே.ஜெகதீசன்,அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் பாலூர் வழக்கறிஞர் எஸ்.ஏ சுதேஷ் ஆனந்த் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடுகளையும் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் எம்.கஜா என்கின்ற கஜேந்திரன் செய்து இருந்தார்.

# இந்தியாவின் மிகப்பெரிய தகவல் தொழில் நுட்ப (ஐடி) வினாடி வினாவின் 23-வது ஆண்டு போட்டிக்கான பதிவு தற்போது தொடங்கியுள்ளது!

*சென்னை, ஆகஸ்ட் 24 2021:* டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் தனது "டிசிஎஸ் ஐடி விஸ்" என்ற வினாடி வினா போட்டியின் 23-வது ஆண்டுப் பதிப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. பள்ளிகளுக்கு இடையேயான இந்தியாவின் மிகப் பெரிய வினாடி வினா போட்டியாக, டிசிஎஸ் ஐடி விஸ் போட்டி திகழும் நிலையில் இது இந்திய பள்ளிகளுக்கு இடையேயான ஒரு தேசிய தகவல் தொழில் நுட்ப அளவுகோலாக உருவெடுத்துள்ளது. கடந்த ஆண்டு ஏற்கெனவே டிஜிட்டல் முறையில் இந்தப் போட்டி நடத்தப்பட்ட நிலையில், டிசிஎஸ்-சின் இந்த அறிவாற்றல் முன் முயற்சியின் 23-வது ஆண்டு பதிப்பு முன் எப்போதையும் விட உற்சாகமாக இந்தியா முழுவதும் நடத்தப்பட உள்ளது.

தனித்துவமான அறிவுசார் தளமான "டிசிஎஸ் ஐடி விஸ்" வினாடி வினாப் போட்டி 1999-ம் ஆண்டில் முதல் முறையாக நடத்தப்பட்டது. தொழில்நுட்பத்தை மாணவர்கள் புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க உதவும் நோக்குடன் இந்தப் போட்டி தொடங்கப்பட்டது. இந்த வினாடி வினா மாணவர்கள் தங்களது அறிவைப் பல்வேறு தளங்களில் ஆழமானதாக வளர்த்துக் கொள்ள உதவுகிறது. டிசிஎஸ் ஐடி விஸ் போட்டி தற்போது இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் மிக நீண்ட கால அளவைக் கொண்ட, பள்ளிகளுக்கு இடையிலான தகவல் தொழில்நுட்ப (ஐடி) வினாடி வினா போட்டியாகத் திகழ்கிறது.

இதில் பங்கேற்க செப்டம்பர் 30 வரை இந்த இணைப்பில் www.tcs.com/itwiz/register-here மாணவர்கள் பதிவு செய்துகொள்ளலாம். இந்தப் போட்டியின் பயன்களைக் கருத்தில் கொண்டு உண்மையான பலன்கள் மாணவர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் போட்டிக்குப் பதிவு செய்ய நுழைவுக் கட்டணம் ஏதும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்த பிறகு, வினாடி வினா தொடங்குவதற்கு முன்பாக இரண்டு தனித்தனி தொடக்க நிலைச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படும்.

இந்த தொடக்கச் சுற்று போட்டிகள் டிசிஎஸ் ஐஒஎஸ் தளத்தில் நடத்தப்படும். அதைத் தொடர்ந்து கால் இறுதிப் போட்டிகள் நடைபெறும். இந்த கட்டத்தில் 96 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு பின்னர் அரையிறுதிக்குத் தகுதி பெறுவதற்கான போட்டி நடைபெறும். அதில் 6 பேர் தேர்வு செய்யப்படுவார்கள். இதில் முதல் 6 இடங்களைப் பிடிக்கும் மாணவர்கள் தேசிய அளவிலான இறுதிப் போட்டியில் பங்கேற்பதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். டிசிஎஸ் ஐடி விஸ் போட்டியின் 23-வது ஆண்டு பதிப்பில் வெற்றி பெறுபவருக்கு "நாட்டின் தகவல் தொழில் நுட்ப வழிகாட்டி" என்ற கவுரவ பட்டம் சூட்டப்படும். அத்துடன் கோப்பை, தங்கப் பதக்கம், வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் மற்றும் ஆச்சரியப்படத்தக்க பரிசுக் கூப்பன்கள் ஆகியவையும் வழங்கப்படும்.

# 2,000 ஆண்டுகளுக்கு மேலாக வரலாற்றை கொண்ட சென்னை பெருநகரம் வெறும் 382 ஆண்டுகள் பழமையானது என்று முதல்வர் ஏற்றுக் கொள்கிறாரா - சென்னை 2000 ப்ளஸ் அறக்கட்டளை தலைவர் ஆர். ரங்கராஜ்

*சென்னை, ஆகஸ்ட் 24 2021:* மெட்ராஸ் டே கொண்டாட்டங்களை வரவேற்று தமிழக முதல்வர் திரு மு க ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டது சென்னையின் உண்மையான வரலாற்றை, கலாச்சாரத்தை, பாரம்பரியத்தை அறிந்தவர்களுக்கு பெரும் அதிர்ச்சியாக அமையும். 2,000 ஆண்டுகளுக்கு மேலாக வரலாற்றை கொண்ட சென்னை பெருநகரம் வெறும் 382 ஆண்டுகள் பழமையானது என்று முதல்வர் ஏற்றுக்கொள்கிறாரா என்ற கேள்வி எழுகிறது.

சென்னையின் வயது 382 என்றால் 2,000 ஆண்டுகளாக இங்கே ஆட்சி செய்த 40 விற்கும் மேலான அரசர்கள் வாழவில்லையா, இங்கே ஆட்சி புரியவில்லையா, அவர்கள் ஆட்சிகளின் சிறப்புகளை நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் சாட்சி சொல்லவில்லையா என்ற கேள்வியும் எழுகிறது.

சென்னை பெருநகர் பகுதியில் திருவொற்றியூர், திருவான்மியூர், திருவல்லிக்கேணி , மயிலாப்பூர், எழும்பூர், புரசைவாக்கம், பாடி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், மனலி ,சைதாப்பேட்டை, நங்கநல்லூர், வேளச்சேரி, திருசூலம், பல்லாவரம், தாம்பரம், சோமங்கலம், மணிமங்கலம், திருநீர்மலை, திருநின்றவூர், மாங்காடு, கோயம்பேடு, பூவிருந்தமல்லீ, திருவள்ளூர், மதுரவாயல், திருமுல்லைவாயல் , வியாசர்பாடி, வில்லிவாக்கம், விருகம்பாக்கம் போன்ற பகுதிகளில் ஏராளமான கல்வெட்டுகள் 1,000 ஆண்டுகளுக்கு முன்னாள் நிறுவப்பட்டன, அவைகள் இல்லை என்று தமிழக அரசு தற்போது கூறுகிறதா? அங்கே எல்லாம் சிறந்த நிர்வாகம், போக்குவரத்து, வர்த்தகம், ஏற்றுமதி, இறக்குமதி, விவசாயம், நீர்ப்பாசனம், தொழில்கள், கல்வி , மருத்துவம், நீதித்துறை, உள்ளாட்சிகள் இருந்தன என்று 1,000 ஆண்டுகளுக்கு முன்னாள் நிறுவப்பட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன, அவைகள் இல்லையா?

சென்னையின் வயது 382 என்றால் 2,000 ஆண்டுகளுக்கு முன் இங்கே மயிலாப்பூரில் திருவள்ளுவர் வாழவில்லையா, நமக்கு திருக்குறளை அளிக்கவில்லையா?

மணிமங்கலத்தில் 7ம் நூற்றாண்டில் போர் நடந்ததற்கான செப்பேடு ஆதாரங்கள் இல்லையா? அரக்கோணம் அருகில் கூவம் நதிக்கரையில் தக்கோலத்தில் 10ம் நூற்றாண்டில் போர் நடந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இல்லையா?

தமிழ் கலாச்சாரம், தமிழர் பண்பாடு, தமிழ் மொழி சிறப்பாக விளங்கினால், தாங்கள் நடத்தும் ஆங்கில ஏட்டு கம்பெனி வளரமுடியாது என்று நினைப்பவர்களின் சூழ்ச்சி வலையில் தற்போதுள்ள தமிழக அரசு விழுந்துவிட்டதோ என்ற அச்ச உணர்வு ஏற்படுகிறது. தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியிலும், திரு அண்ணாதுரை மற்றும் திரு கருணாநிதி அவர்களின் ஆட்சிகளிலும். அஇஅதிமுக ஆட்சிகளில் , திரு எம். ஜி. யார், செல்வி ஜெயலலிதா ஆட்சிகளிலில் கூட தமிழக அரசு இந்த மெட்ராஸ் டே கொண்டாட்டங்களை புறக்கணித்தது, மெட்ராஸ் என்ற பெயரை ஏற்றுக்கொள்ளவில்லை. திரு அண்ணாதுரை அவர்கள் மெட்ராஸ் மாநிலம் என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்றினார். திரு கருணாநிதி அவர்கள் மெட்ராஸ் நகரம் என்ற பெயரை சென்னை என்று 1996ல் மாற்றினார். அவர்களின் முடிவுகளை மாற்றி இன்று மீண்டும் மெட்ராஸ் என்ற பெயர் வைக்கப்படுமா? தமிழ் வரலாற்றை, தமிழர் பண்பாட்டை வெளிநாட்டு சக்திகளிடமிருந்து காப்பாற்றவேண்டும் என்று நினைப்பவர்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமோ?

# மரணமடைந்த பூசாரிகள் ஓய்வூதியம் நிருத்தவும், காத்திருக்கும் பூசாரிக்கு வழங்கக்கோரி கோவில் பூசாரிகள் சங்க மாநிலத் தலைவர் மனு

*கோவை, ஆகஸ்ட் 24 2021:* கோவில் பூசாரிகள் சங்கம் மாநிலத் தலைவர் வாசு அளித்த மனுவில் கூறியிருப்பதாவது. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோவில்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற 60 வயதுக்கு மேற்பட்ட பூசாரிகள் சிலர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

அந்தப் பணம் வங்கியில் அவர்களுக்கு பெயரில் வரவு வைக்கப்படுகிறது. அந்த ஓய்வூதியப் பணத்தை வங்கியில் இருந்து எடுக்க ஒரு சில பூசாரிகள் ஏடிஎம் கார்டுகளை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் அவர்களில் சிலர் மரணமடைந்த பிறகும் தொடர்ந்து அவர்களது வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டு வருகிறது. அவர்களது உறவினர்கள் பயனாளி பயன்படுத்திய ஏடிஎம் கார்டு மூலம் அந்தப் பணத்தை தொடர்ந்து எடுத்து தங்களது தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர். பயனாளி இறந்த தகவலை உரிய அதிகாரிகளிடம் உறவினர்கள் பெரும்பாலும் தெரிவிப்பதில்லை.

ஆண்டுதோறும் லைஃப் சர்டிபிகேட் எனப்படும் உயிர் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் பயனாளிக்கு தொடர்ந்து வலியுறுத்தப்படுவதில்லை என்ற காரணத்தால் அவர் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்பதைப் பற்றி உரிய அதிகாரிகள் ஆய்வு செய்வதில்லை. ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்தோரை மாவட்ட அளவுக்கு நீண்டதூரம் வரவழைத்து அலைக்கழிக்க கூடாது என்பதற்காக ஆண்டு தோறும் லைஃப் சர்டிபிகேட் சமர்ப்பிப்பதில் ஒரு சில உதவி ஆணையர்□கள் ஆய்வு செய்யாத காரணத்தால் ஓய்வூதியம் அளிக்கப்பட்டதை இறந்த பயனாளிகளின் உறவினர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இதனால் ஓய்வூதியம் வேண்டி புதிதாக விண்ணப்பம் செய்வோருக்கு ஓய்வூதியம் கிடைக்க வழியின்றி போய்விடுகிறது. ஓய்வூதியம் கோரி வயது முதிர்ந்த பல பூசாரிகள் நீண்டகாலமாக காத்துக் கிடக்கின்றனர்.

எனவே மாவட்ட அளவில் நேர்காணல் நடத்தாமல் தாலுகா அளவில் திருக்கோவில் ஆய்வாளர்கள் ஆண்டுதோறும் ஓய்வூதியம் பெறும் பூசாரிகள் உயிருடன் இருக்கின்றனரா அல்லது இல்லையா என்பதை கள ஆய்வு செய்ய வேண்டும். அதற்கான உத்தரவுகளை ஆணையர் அவர்கள் பிறப்பிக்க முற்படவேண்டும்.இதன் மூலம் மறைந்த பூசாரிகளின் ஓய்வூதியத்தை சிலர் ஏடிஎம் கார்டு மூலம் எடுத்து பயன்படுத்துவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். என கோரியிருந்தார்.

# செஞ்சி உழவர் சந்தையை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்த அமைச்சர் செஞ்சி மஸ்தான்



*செஞ்சி, ஆக. 24 2021:* விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் ரூ 14. லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட உழவர் சந்தையினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் பொது மக்களின் பயன் பாட்டிற்காக வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

செஞ்சியில் 24 கடைகளுடன் 2009 ஆம் ஆண்டு உழவர் சந்தை திறந்து வைக்கப்பட்டது. பின்னர் உழவர் சந்தை பராமரிப்பு இல்லாமல் போனதால் உழவர் சந்தை மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் போனது. இந்நிலையில் தற்போது ரூ 14 லட்சம் மதிப்பில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு உழவர் சந்தை புதுப்பிக்கப்பட்டது.

உழவர் சந்தையினை திறந்து வைத்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் விவசாயிகள் விற்பனை செய்ய ஏதுவாக அடையாள அட்டையினை வழங்கியும், முதல் விற்பனையையும் தொடங்கி வைத்தார். அப்போது அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஒவ்வொரு கடையிலும் உள்ள காய்கறிகளை கேட்டறிந்து கத்திரிகாய், வெண்டைகாய், புடலங்காய், முருங்கை, புடலங்காய், வாழைக்காய், கீரை வகைகள் உள்ளிட்ட காய்கறிகளை விவசாயிகளிடம் தகுந்த விலை கொடுத்து வாங்கிச்சென்றார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் மானியத்துடன் 30 நபர்களுக்கு ரூ 1,25, 714. மதிப்பீட்டில் மழைத்தூவான் கருவி, தெளிப்பு நீர்பாசன கருவி, உளுந்து விதை மற்றும் உயிர் உரம், கோணாவீடர் மற்றும் பேக்ட் ஆர்கானிக் உரம், திரவ நானோ யூரியா உள்ளிட்ட பொருட்களையும், தோட்டக்கலைத்துறை சார்பில் மானியத்துடன் 10 நபர்களுக்கு ரூ 6,64,500. மதிப்பீட்டில் நிழல் வலை குடில் பணி ஆணை, சிப்பம் கட்டும் அறை மற்றும் சின்ன வெங்காயம் விதை உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் த.மோகன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ரமணன், வேளாண் துணை இயக்குனர் கண்ணகி மற்றும் முன்னாள் எம்எல்ஏ பா.செந்தமிழ்ச்செல்வன், செஞ்சி ஒன்றிய திமுக செயலர் ஆர். விஜயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மயிலம் பகுதிகளில் தொடர் திருட்டில் ஈடுபட்ட கோவில் பூசாரி உட்பட 8 பேர் கைது 26 சவரன் தங்க நகை, 1 கிலோ வெள்ளி பொருட்கள், கார் பறிமுதல்



*திண்டிவனம், ஆக. 24 2021:* மயிலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்த மதபோதகர் மற்றும் கோயில் பூசாரி உட்பட 8 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடமிருந்து 26 சவரன் தங்க நகைகள், ஒரு கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த மயிலம் பொறியியல் கல்லூரி பேருந்து நிறுத்தம் அருகே மயிலம் காவல் நிலைய ஆய்வாளர் கிருபா லட்சுமி தலைமையிலான போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த காரை போலீசார் நிறுத்த கூறிய போது காரில் வந்தவர்கள் போலீசாரை இடிப்பது போல் வந்து மின்னல் வேகத்தில் பறந்து சென்றனர். இதனையடுத்து காரின் பின்னால் விரைந்து சென்ற போலீசார் காரினை மடக்கி பிடித்து காரில் இருந்தவர்களிடம் விசாரணை செய்தனர். போலீசார் விசாரணை செய்ததில் காரில் இருந்த 8 பேரும் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததை தொடர்ந்து, 8 பேரையும் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை செய்ததில், அவர்கள் மயிலம் அடுத்த முப்புலி கிராமத்தில் கோவிலில் நகை கொள்ளை அடித்தது, வெளியனூரில் வீட்டை உடைத்து உள்ளே சென்று கணவன், மனைவி, மகள் ஆகியோரை கட்டிப்போட்டு அவர்களிடமிருந்து 49 சவரன் மற்றும் வெள்ளி பொருட்களை கொள்ளையடித்தது மற்றும் ஜக்காம்பேட்டை பகுதியில் பூட்டியிருந்த இரு வீடுகளில் நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்ததை ஒப்புக் கொண்டனர். மேலும் அவர்களிடம் நடத்திய விசாரணையில் திருநெல்வேலியை சேர்ந்த மகேந்திரன், புரோஸ்கான்யாசர், மதிபாலன், விக்கிரவாண்டி அடுத்த தென்பேர் புதுபாளையத்தை சேர்ந்த கிறிஸ்த்தவ மத போதகர் ஏழுமலை, அவிநாசியைச் சேர்ந்த ஆனந்தகுமார், விஜய்பாண்டியன், திண்டிவனம் கீழ் மயிலம் பகுதியைச் சேர்ந்த அம்மன் கோயில் பூசாரி சக்திவேல், திருவண்ணாமலை மாவட்டம் குமார ஆகிய 8 பேரும் இணைந்து மயிலம், கடலூர், விழுப்புரம், புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வீட்டின் பூட்டினை உடைத்து தொடர்ந்து திருட்டில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதில் கோவில் பூசாரியான சக்திவேலும் கிறிஸ்தவ மத போதகரான ஏழுமலையும் மயிலம் விக்ரவாண்டி சுற்றியுள்ள பகுதிகளில் பூட்டியிருந்த வீடுகள் அதிகளவில் பணம் நகை வைத்திருப்போர் வீடுகள் குறித்த தகவலை திருநெல்வேலியை சேர்ந்த திருட்டுக் கும்பலிடம் தொடர்ந்து 7 ஆண்டுகளாக தொடர்பிலிருந்து கூறி வருவதாகவும் அவர்களுக்கு மயிலம் பகுதியில் தங்கையிடம் ஏற்பாடு செய்து கொடுத்ததும் விசாரணையில் தெரிய வந்தது. இதில் கோயில் பூசாரி சக்திவேல் அவர் வழிபடும் கோவிலில் புதையல் இருப்பதாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு பள்ளம் தோண்டி புதையல் கிடைக்காமல் முயற்சியைக் கைவிட்டதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து 8 பேரையும் மயிலம் போலீசார் கைது செய்து 26 சவரன் தங்க நகைகள், 1 கிலோ வெள்ளி பொருட்கள், ஒரு கார் ஆகியவற்றை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த குற்ற சம்பவங்களில் தொடர்புடைய மேலும் ஒருவர் சிறையில் உள்ள நிலையில் மற்றொருவரை போலீசார் தேடி வருகின்றனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## போளூர் ரோட்டரி சங்கம் மற்றும் பசுமை சேவை காலம் இணைந்து ஒழுங்குமுறை விற்பனை கூடம் வளாகத்தில் 500 மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது



திருவண்ணாமலை, ஆகஸ்ட் 24 2021: திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ரோட்டரி சங்கம் மற்றும் பசுமை சேவை காலம் இணைந்து ஒழுங்குமுறை விற்பனை கூடம் வளாகத்தில் 500 மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. திருவண்ணாமலை விற்பனைக்குழு செயலாளர் தலைமை தர்மராஜ் முன்னிலை வகித்தார். ஐபிடிஜி பாண்டியன் ஆடிட்டர், போளூர் ஒழுங்குமுறை விற்பனை கூடம் கண்காணிப்பாளர் அருணி, சிறப்பு விருந்தினர்கள் போளூர் வட்டாட்சியர் சாப்ஜான், போளூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் முஹம்மத் ரிஸ்வான், போளூர் வன அலுவலர் குமார்,போளூர் காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி, ரெண்டேரிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் கருணாநிதி, ஆரணி ரோட்டரி துணை ஆளுநர் பாலசுந்தரம், சேவைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் போளூர் பசுமை சேவை களம் நண்பர்கள், போளூர் ரோட்டரி சங்க தலைவர் பிரதாப் குமார்,செயலாளர் சிவலிங்கம், பொருளாளர் ரமேஷ் பாபு, கிளப் சேர்மன் குறுங்காடு வெங்கடேசன், ரோட்டரி சங்கப்பணி மனோஜ் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**மதுரை: விசிக தலைவரும் சிதம்பரம் எம்பியுமான தொல் திருமாவளவன் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் சத்திரப்பட்டி அருகே உள்ள தொண்டமான்பட்டியில் எல்லாளன் தலைமையில் தொகுதி செயலாளர் கார்வண்ணன், முன்னிலையில் விசிக கொடி ஏற்றப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், மாவட்ட அமைப்பாளர் அரசு முத்துப்பாண்டியன், மாவட்ட துணை அமைப்பாளர் மாதவன், மகளிரணி செல்வி பேச்சி சித்ரா, வசந்தி, சுகந்தி பாண்டியராஜன் ஒன்றிய துணைச் செயலாளர்கள் செல்ல மணி, மணிகண்டன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.**



**மதுரை: மதுரை தெப்பக்குளத்தில் பேரிடர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் ஆய்வு செய்தனர். இதில் மதுரை தெற்கு தாசில்தார் மோகன்தாஸ், கிராம நிர்வாக அதிகாரி சுருளி ஆகியோர் உடனிருந்தனர்.**

## பல்வேறு குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட சரித்திரப் பதிவேடு குற்றவாளி ஓராண்டிற்கு நன்னடத்தையில் விடுவிப்பு

காஞ்சிபுரம், ஆக.24 2021: காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு குற்ற வழக்குகளில் ஈடுபட்ட சரித்திர பதிவேடு குற்றவாளிகள் மீது ஆக்கப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம்.சுதாகர் அறிவுறுத்தியதிற்கிணங்க விஷ்ணுகாஞ்சி காவல்நிலையத்தில கொலை, கொலை முயற்சி, வழிப்பறி மற்றும் அடிதடி உட்பட பல்வேறு வழக்குகளில் சம்மந்தப்பட்ட சரித்திரப் பதிவேடு ரவுடியான காஞ்சிபுரம், அண்ணா தெருவை சேர்ந்த கோபி (எ) கோழிகோபி (32 ) விஷ்ணுகாஞ்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தர்ராஜி வேண்டுகோளின்படி காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் கோபியை ஓராண்டிற்கு நன்னடத்தையில் இருக்க வேண்டி ஆணை பிறப்பித்துள்ளார்.

## பல்வேறு குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட ரவுடி கைது

காஞ்சீபுரம், ஆக.24 2021: காஞ்சீபுரம் மாவட்டத்தில் பல்வேறு குற்ற வழக்குகளில் ஈடுபட்ட ரவுடிகள் மற்றும் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம்.சுதாகர் அறிவுறுத்தியதிற்கிணங்க காஞ்சீபுரம் மாவட்டத்தில் பல்வேறு வழக்குகளில் சம்மந்தப்பட்ட சரித்திர பதிவேடு குற்றவாளியான காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே நேரு நகரை சேர்ந்த துரைபாபு (30) தலைமறைவாக இருந்துகொண்டு பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவரை காஞ்சி தாலுக்கா போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜகோபால் தலைமையிலான குழு துரைபாபுவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## செஞ்சி மற்றும் மேல்மலையனூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று செஞ்சியில் புதிய பேருந்து சேவையை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கொடியசைத்து துவக்கி வைத்தார்

